**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure).**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, KARUR**
**DVC No. 18 /2022**

**Deposition of Witness :RW1**

| Name | சத்தீஷ் | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | கோவிந்தராஜன் | Village | |
| Age | | Calling | |
| **Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969 (Act 44 of 1969) on the day of 24.09.2025.** | | | |

**மனு அனுமதிக்கப்பட்டதன்பேரில் சாட்சி வரவழைக்கப்பட்ட மீண்டும் முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

**கூடுதல் முதல் விசாரணை**

என் தரப்பு வழக்கினை நிரூபிக்கும் வகையில் கீழ்கண்ட ஆவணத்தை கூடுதல் ஆவணமாக குறியீடு செய்கிறேன்.

| S.No | Dated | Documents | Exhibits |
|---|---|---|---|
| 1. | 22.02.2022 | மனுதாரர் எழுதி கொடுத்த வாக்குமூலத்தின் அசல் | எ.ம.சா.ஆ.16 |

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிருரை, பிரமாண வாக்குமூலம் மற்றும் மனுதாரர் இடைக்கால பரிகாரம் கேட்டு தாக்கல் செய்த CRLMP NO. 455/2022 மனுவில் நான் தாக்கல் செய்த பதிலுரையில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும் என்றால் சரிதான். சமூக பாதுகாப்பு அலுவலர் நடத்திய விசாரணையின் அறிக்கை எனக்கு வழங்கப்பட்டதா என்றால் இல்லை. மனுதாரருக்கும் விசாரணையில் அறிக்கை வழங்கப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மனுதாரர் என்ன படித்துள்ளார் என்றால் பி.ஏ., முதலாமாண்டு படித்துள்ளார். நான், மனுதாரர், என்னுடைய

Sd/-R.Mahesh

நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகளிர் நீதிமன்றம்(பொறுப்பு ), கரூர்

மகன் அபிஷேக்குடன் விஷால் நெஸ்ட் அப்பார்ட்மெண்ட்டில் எத்தனை ஆண்டுகள் குடியிருந்தோம் என்றால் 2007 ம் ஆண்டு முதல் 2014 ம் ஆண்டு என் மகன் மருத்துவ படிப்புக்கு சேரும் வரை குடியிருந்தோம்.

2) அதன் பின்பு நானும், மனுதாரரும் மட்டும் மேற்படி அப்பார்ட்மெண்டில் குடியிருந்தோம் என்றால் சரிதான். தற்போது அந்த அப்பார்ட்மெண்டில் யார் குடியிருக்கிறார்கள் என்றால் மனுதாரரும் , அவரது நண்பர்களும் குடியிருப்பதாக கேள்விப்பட்டேன். மனுதாரரும், விடுமுறைக்காக வரும் அவரது மகன் மட்டும்தான் குடியிருக்கிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி அப்பார்ட்மெண்டை விட்டு நான் எந்த வருடம் சென்றேன் என்றால் 5 வருடங்களாகிறது. மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ்ந்த விஷால் நெஸ்ட் அப்பார்ட்மெண்டில்தான் தற்போதும் குடியிருக்கிறார்கள் என்றால் சரிதான். நான்தான் மனுதாரரை விட்டு பிரிந்து சென்றேன் என்று சொன்னால் சரியல்ல. மனுதாரர் ஏற்படுத்திய மனஉளைச்சலில்தான் நான் வெளியே சென்று விட்டேன். நான் சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல.

3) மனுதாரர் எனக்கு திருமணத்திற்கு முன்பு என்ன உறவு முறை என்றால் என் மாமன் மகள் ஆவார். திருமணத்திற்கு முன்பே மனுதாரர், மனுதாரரின் அப்பா ஆகியோர்களை தெரியும் என்றால் சரிதான். மனுதாரருடைய பெற்றோர்கள் , எனது பெற்றோர்கள் நெருக்கமாக இருந்தார்கள் என்றால் திருமணம் வரை நெருக்கமாக இருந்தார்கள். மேற்படி காரணமாகதான் மனுதாரரை எனக்கு திருமணம் செய்து வைத்தார்கள் என்றால் இருவரின் பெற்றோர்கள் சம்மதத்துடன் காதலித்து கொண்டிருந்த எங்களை திருமணம் செய்து வைத்தார்கள். திருமணத்திற்கு முன்பே மனுதாரரின் அப்பாவுடைய செல்வ செழிப்பு மற்றும் குணநலன்கள் பற்றி தெரியும் என்றால் சரிதான்.

4) திருமணத்தின்போது மனுதாரருக்கு 100 பவுன் போட்டார்கள் என்றும், எனக்கு எத்தனை பவுன் போட்டார்கள் என்றால் ஞாபகமில்லை. எனக்கு 10 பவுன் போட்டார்கள் என்றால் எவ்வளவு போட்டார்கள் என்று எனக்கு தெரியாது. போட்டதை திரும்பி வாங்கி கொண்டார்கள். எனக்கு போட்ட நகையை விற்று பணமாக வாங்கி கொண்டேன் என்று

Sd/-R.Mahesh

நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகளிர் நீதிமன்றம்(பொறுப்பு ), கரூர்

சொன்னால் சரியல்ல. மாருதி கார் வாங்கி கொடுத்தார்கள் என்றால் சரிதான். திருமணம் முடிந்த பின்பு தான் HOUSE SURGEON ஆக சென்றேன் என்றால் இல்லை. HOUSE SURGEON ஆக இருக்கும்போதே திருமணம் நடந்தது. HOUSE SURGEON ஆக சென்னை மருத்துவகல்லூரியில் பணிபுரிந்தேன் என்றால் சரிதான். சென்னையில் தங்குவதற்கு மனுதாரரின் அப்பாதான் ஏற்பாடு செய்தார் என்று சொன்னால் சரியல்ல. என் சென்னையில் உள்ள என் மற்றொரு மாமாவின் வீட்டில் தங்கி இருந்தோம்.

5) திருமணத்திற்கு முன்பு என் அப்பா, அம்மா நாமக்கல்லில் குடியிருந்தார்கள் என்றால் சரிதான். நான் சென்னையில் இருக்கும்போது மனுதாரருக்கு கருவுற்றார் என்றால் சரிதான். HOUSE SURGEON முடித்துவிட்டு கேரளாவில் பணிபுரிந்தபோது மதுரையில் மனுதாரருக்கு குழந்தை பிறந்தது. அதன் பின்பு நான் , என் அப்பா, அம்மா, மனுதாரர் ஆகியோர் நாமக்கல்லில் குடியிருந்தோம் என்றால் நான் மேல்படிப்புக்கு சேரும்வரை சிறிது காலம் நாமக்கல்லில் குடியிருந்தோம். மேற்படி காலகட்டத்தில்தான் என் தாயார் மனுதாரரிடம் தாய் மூகாம்பிகை திருமண மண்டபத்தையோ அல்லது மருத்துவமனை கட்டி கொடுக்குமாறு கேட்டார் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு எந்த வருடம் MS ORTHO படிப்பில் சேர்ந்தேன் என்றால் 1997 ல் மார்ச் மாதம் சேர்ந்தேன். மேற்படி காலகட்டத்தில் மதுரை கே.கே.நகரில் குடியிருந்தோம் என்றால் சரிதான்.

6) மேற்படி இடத்தில் குடியிருப்பதற்கான அனைத்து வசதிகளையும் மனுதாரரின் தகப்பனார் செய்தார் என்று சொன்னால் சரியல்ல. மனுதாரரின் தகப்பனார் ரூ.1000 த்திற்கு வீடு பார்த்தார், நான்தான் தனியாக ரூ. 3000 த்திற்கு வீடு பார்த்து குடியிருந்தேன். நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. அந்த சமயத்தில் எனது பெற்றோருக்கு வரும் வீட்டு வாடகை வருமானத்தை வைத்துதான் எங்கள் செலவை சமாளித்தேன். வாடகை வருமானத்தை தவிர வேறு வருமானம் இல்லை என்பதால் மனுதாரரின் தகப்பனார் செலவு செய்தார் என்று சொன்னால் சரியல்ல. எனக்குஉதவி தொகை ரூ. 1600, வீட்டு வாடகை வருமானம் ரூ. 12000 கிடைத்தது. நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் மதுரையில் படிக்கும்போதுதான் தாய் மூகாம்பிகை

Sd/-R.Mahesh

நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகளிர் நீதிமன்றம்(பொறுப்பு ), கரூர்

மண்டபத்தை மனுதாரரின் அக்காவின் கணவருக்கு எழுதி கொடுத்துவிடுவார்கள் என்று கருதி நான் பிரச்சனை செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. மனுதாரரின் அக்காவின் கணவரும் மருத்துவர் என்றால் சரிதான்.

7) இரண்டு பேரும் மருத்துவர் என்பதால் அவர் பெரியாளா, நான் பெரியாளா என்று கருதி மனுதாரிடம் பிரச்சனை செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. மனுதாரருடைய அப்பா மனுதாரரின் அக்காவின் கணவருக்கு ஆதரவாக இருப்பதாக சொல்லி , நான் மனுதாரரிடம் பிரச்சனை செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. நான் லண்டன் எந்த வருடம் சென்றேன் என்றால் 2003 வருடம் சென்றேன். நான் லண்டன் சென்றபின்னிட்டு 3 வருடம் கழித்து மனுதாரரும், என் மகனும் லண்டன் வந்தார்கள். நான் லண்டன் சென்றதற்கான செலவும், மனுதாரரும், மகனும் லண்டன் சென்றதற்கான செலவுகளை மனுதாரரின் தகப்பனார்தான் பார்த்து கொண்டார் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய எதிருரையிலும், பிரமாண வாக்குமூலத்திலும் மனுதாரரும், மனுதாரரின் மகனும் லண்டன் செல்வதற்காக மனுதாரரின் தகப்பனார் டிக்கெட் எடுத்து கொடுத்தார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் லண்டன் செல்ல மனுதாரரின் தகப்பனார் செலவு செய்யவில்லை.

8) நான் லண்டன் சென்று வந்ததற்கு பின்னிட்டு எத்தனை வருடம் கழித்து மருத்துவமனை ஆரம்பித்தேன் என்றால் வந்தவுடனேயே என் மகனின் அபிஷேக் பேரில் கிளினிக் ஆரம்பித்தேன். என் மகன் அபிஷேக் பேரில் கிளினிக் ஆரம்பித்த பின்புதான் மருத்துதுறை சிறப்பாக நடந்தது என்றால் அப்போதுதான் மருத்துவ தொழில் ஆரம்பித்தேன். அப்போது S&V லோகா மருத்துவமனையில் எலும்பு முறிவு சிகிச்சை நிபுணராக பணிபுரிந்து வந்தேன். அதன் பின்புதான் நான் சம்பாதிக்க ஆரம்பித்தேன் என்றால் லண்டனில் நான் சம்பாதித்துதான் இருந்தேன். மேற்படி கிளினிக் ஆரம்பித்த பின்பு ஒரு வருடம் கழித்துதான் விஷால் நெஸ்ட் அப்பார்ட்மெண்டை வாங்கினேன் என்றால் ஒரு வருடத்திற்குள்ளேயே சொந்தமாக கடன் வாங்கி வாங்கினேன்.

9) திருமணம் முடிந்ததிலிருந்து மனுதாரர் என்னுடன் இல்லதரசியாக இருந்து வந்தார் என்று சொன்னால் சரிதான். மனுதாரர் எந்த வேலைக்கும் செல்லவில்லை

Sd/-R.Mahesh

நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகளிர் நீதிமன்றம்(பொறுப்பு ), கரூர்

என்றால் சரிதான். மனுதாரருக்கு தனிப்பட்ட வருமானம் இல்லை என்றால் எங்களுடன் இருந்த காலகட்டத்தில் இல்லை. கரூரில் அபிஷேக் கிளினிக் நல்லமுறையில் நடந்து கொண்டிருந்ததால் மருத்துவமனை கட்டுவதற்கு முடிவு செய்தேன் என்று சொன்னால் சரிதான். 2014 ல் முடிவுசெய்தேன். மருத்துவமனை கட்டனும் என்று தாந்தோணிமலை பாலாஜி நகரில் மனுதாரரின் அப்பா 17.09.2010 ம்தேதியன்று ஆவண எண். 8835/2010 பத்திரப்படி இடம் வாங்கி கொடுத்தார் என்று சொன்னால் சரிதான். மேற்படி இடத்தை 04.05.2012 ம் தேதியன்று மனுதாரருக்கு தான செட்டில் மெண்ட் எழுதி கொடுத்தேன் என்று சொன்னால் மனுதாரர் கேட்டுகொண்டதின்பேரில் எழுதி கொடுத்தேன்.

10) மனுதாரரின் தகப்பனார் மூத்த மருமகனுக்கு நிறைய செய்ததாகவும், எனக்கு செய்யவில்லை என்று சொல்லி இடம் வேண்டாமென்று சொன்னதால் மனுதாரர் கேட்டார் என்றும், அதனால் எழுதி கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல. மனுதாரரின் தகப்பனார் கொடுத்த இடத்தில் மருத்துவமனை கட்ட விருப்பமில்லை என்ற காரணத்தினால் நான் எழுதி கொடுத்தேன். மேற்படி இடம் வாங்கி கொடுத்ததில் இருந்து அந்த இடத்தை திருப்பி எழுதி கொடுக்கும்வரை தொடர்ச்சியாக பிரச்சனை வந்தது என்றுசொன்னால் சரியல்ல. நான் மனுதாரருடன் எத்தனை வருடமாக பேசவில்லை என்று சொன்னால் வழக்கு தாக்கல் செய்யும் வரை பேசி கொண்டுதான் இருந்தேன். மேற்படி இடம் வாங்கி கொடுத்ததில் பிரச்சனை ஏற்பட்டது என்றும், அதிலிருந்து நான் மனுதாரரிடம் கணவராக நடந்து கொள்ளவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஒரே வீட்டில் இருந்தாலும் மனுதாரரிடம் முகம் கொடுத்து பேசவில்லை என்று சொன்னால் சரியல்ல.

மனுதாரர் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

Sd/–சத்தீஷ்

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

Sd/–R.Mahesh<br>
நீதித்துறை நடுவர்,<br>
கூடுதல் மகளிர் நீதிமன்றம்(பொறுப்பு ), கரூர்